# சிலப்பதிகாரத்தில் நிறைமொழியும் - மறைமொழியும்

**சி. விமலா**
பகுதிநேர முனைவர்பட்ட ஆய்வாளர்
மா.மன்னர் கல்லூரி, (த), புதுக்கோட்டை
பாரதிதாசன் பல்கலைக்கழகம், திருச்சிராப்பள்ளி, தமிழ்நாடு, இந்தியா

**முனைவர் சி. அமுதா**
தமிழ்த்துறை, இணைப்பேராசிரியர்
மா.மன்னர் கல்லூரி, (த), புதுக்கோட்டை
பாரதிதாசன் பல்கலைக்கழகம், திருச்சிராப்பள்ளி, தமிழ்நாடு, இந்தியா

**OPEN ACCESS**

Manuscript ID: ASH-2026-1304

Volume: 13

Issue: 4

Month: April

Year: 2026

P-ISSN: 2321-788X

E-ISSN: 2582-0397

Received: 06.02.2026

Accepted: 10.03.2026

Published Online: 01.04.2026

Citation:
Amrutha, S. et al. “The Role of Digital Marketing in Shaping Student Enrollment Decision: Insights from Engineering Colleges in India.” *Shanlax International Journal of Arts, Science and Humanities*, vol. 13, no. 4, 2026, pp. 127-30.

DOI:
https://doi.org/10.34293/sijash.v13i4.10169

This work is licensed under a Creative Commons Attribution-ShareAlike 4.0 International License

**ஆய்வுச்சுருக்கம்**

தமிழ்ச் செவ்விலக்கியங்களைப் படைத்த புலவர்கள் அனைவரும் நிறைமொழியாளர்கள். இவர்கள் சொன்னவை சொன்னபடி நடக்கச் செய்யும் திறனுடையவர்கள். நாவன்மைமிக்கவர்கள். புறயிலக்கியங்களில் தனியொரு புலவர் தானும் தன்னைச் சேர்ந்தவர்களும் நன்மை பெற வேண்டும் என்பதற்காகப் பாப்புணர்ந்து பாடியிருக்கிறார்கள். தான் பாடியதன் நோக்கம் நிறைவேறாதபோதும், தன்னை இகழ்ந்த போதும் கோபமுற்று மறைமொழியாக (பிறர் அறியாமல் மறைத்துச் சொல்லு் சொல்) வாழ்த்தியும் சபித்தும் பாடியிருக்கிறார் புலவர். இதற்கானச் சான்றுப் பாடல்கள் சங்கயிலக்கியங்களில் உள்ளன. இவர்கள் வழிவந்தோர்களில் இளங்கோவடிகளும் ஒருவர். தான் படைத்த காப்பியத்தில் மங்கலமாக தொடங்கி மங்கல வாழ்த்து பாடலை நிறைமொழியில் பாடியிருக்கிறார். மங்கலமாய்ப் பாடும்போதே மறைமொழியையும் பிறர் அறியாமல் கூறிச் செல்கிறார். இக்கட்டுரை நிறைமொழியும் மறைமொழியும் பயின்று வரக்கூடிய பூகர் காண்டத்தில் மங்கல வாழ்த்துப் பாடல் பற்றி விளக்குகிறது.

### நிறைமொழி, மறைமொழி

**”நிறைமொழி மாந்தர் ஆணையிற்கிளந்த**
**மறைமொழி தானே மந்திரமென்ப” (தொல்: பொருள்: செய்யு: 434)**

நிறைந்த மொழியையுடைய மாந்தர் தமது ஆணையார் சொல்லப்பட்ட மறைந்த சொல் மந்திரம் என்பர் (இளம்பூரணர்)

நிறைமொழி மாந்தர் சொல்லிய சொல்லின் பொருண்மை யாண்டும் குறைவின்றிப் பயக்கச் சொல்லும் ஆற்றலுடையவர். ஆணையாற் கிளர்க்கப்பட்டு மறைத்துச் சொல்லும் சொற்றொடர் மந்திரம் (மறைமொழி) எனப்படும் பேராசிரியர்.

### மறைமொழி

மறைமொழி புறத்தார்க்குப் புலனாகாமல் மறைத்துச் சொல்லும் சொற்றொடர் என்றும் ஆணையின் ஆற்றல் அனைத்தையும் தன்னகத்தே மறைத்துக் கொண்டுள்ள மொழி இதனை வாய்மொழி (செய்யுளியல் 75) என்றும் தொல்காப்பியர் கூறுகிறார். வாய்மொழி மந்திரத்திற்கு வழங்கப்படும் வேறு பெயர். மந்திரம் மறைந்துநின்று பொருள் தரக்கூடிய (சுபம், சாபம்) சொல் என்று பொருள் கொள்ளுதல் பொருந்தும்.

சிலப்பதிகாரத்தில் நிறைமொழி மாந்தர் என்று கூறவந்தோம் என்றால் முதல் நிறைமொழியாளர் இளங்கோவடிகள்.

இளங்கோவடிகள் ஒரு நிறைமொழியாளர் தன் தமயன் அரச பதவியேற்க வேண்டும் என்று இளம்வயதிலேயே துறவு மேற்கொண்டார். இவர் நினைத்தது நடந்தது. சீத்தலைச் சாத்தனார் சொல்லி எழுதிய காப்பியத்தில் ஆங்காங்கே நிறைமொழியாளர்கள் பற்றிக் கூறிச் செல்கிறார். பூகார் காண்டத்தில் இவர் ஒரு நிறைமொழியாளர் என்பதற்குச் சான்றாக சிலப்பதிகாரத்தை தொடங்கும் போது மங்கலமாய் தொடங்கிப் பாடியிருக்கிறார். இயற்கையைப் போற்றுகிறார். உலகம் இயங்குவது இயற்கையால். அவையில்லையேல் உலக உயிர்கள் இல்லை. உலகத்து உயிர்களை வாழவைப்பது இயற்கையே. ஆகையால் இயற்கையைப் போற்றுகிறார். நிலவையும், கதிரவனையும் மழையையும் நாட்டையும் நகரத்தையும் போற்றுகிறார்.

**"திங்களைப் போற்றுதும் திங்களைப் போற்றுதும்**
**கொங்கு அல்தார்ச் சென்னி குளிர்வெண் குடை போன்றுஇவ்**
**ஆங்கண் உலகு அளித்தலான்**
**ஞாயிறு போற்றுதல் ஞாயிறு போற்றுதும்**
**காவிரி நாடன் நிகிரிபோல் பொற்கோட்டு**
**மேரு வலம் திரிந்தலான்**
**மாமழை போற்றதும் மாமழை போற்றுதும்**
**நாமநீர்வேலி உலகிற்கு அவன் அளிபோல்**
**மேல் நின்று தான் சுரத்தலான்**
**பூம்புகார் போற்றுதும் பூம்புகார் போற்றுதும்**
**வீங்குநீர் வேலி உலகிற்கு அவன் குலத்தோடு**
**ஓங்கிப் பரந்தொழுகலான்" (சிலம்பு 1-10)**

இளங்கோவடிகள் காப்பியத்தைத் தொடங்கும் போது நிறைமொழியில் மங்கலமாய் தொடங்குகிறார். சூரியன் சந்திரன் மழை போன்ற இயற்கையை வணங்கிப் போற்றுகிறார். சூரியன் சந்திரன் மழை நீர் மூன்றும் இலையென்றால் உலக உயிர்கள் தோன்றாது. உலகத்து உயிர்கள் வாழ முடியாது. ஆகையால் மனிதன் வாழ்வதற்கு ஆதாரமாக இருக்கக்கூடிய இயற்கையை வணங்கி போற்றிப் பின்பு, தமிழகத்தை சோழன் நகரமான பூம்புகார் நரகத்தின் சிறப்பு வெற்றிச் சிறப்பு மன்னன் எவ்வழி அவ்வழி மக்கள் என்று மக்களின் பெருமைகளை கூறி மங்கலமாய் வாழ்த்துகிறார் ஆசிரியர்.

வெண்ணிலவைப் போற்றுவோம். வெண்ணிலவைப் போற்றுவோம். பூதாது உதிர்க்கும் ஆத்தி மலர்மாலை அணிந்த சோழமன்னன் அருளாட்சியின் அடையாளச் சின்னமான வெண்கொற்றக் குடைபோல வெண்ணிலவும் தன் ஒளியால் இவ்வுலகுக்கு இன்பம் அளிக்கிறது. ஆகவே வெண்ணிலவைப் போற்றுகிறார்.

சூரியனைப் போற்றி சுடர்கதிரினை வணங்குவோம். காவிரி பாயும் சோழமண்டலத்தை ஆழும் மாமன்னன் ஆணைச்சக்கரம் போல் சூரியனும் மேருமலையை சுற்றி வருகிறது. ஆகையால் சூரியனை வணங்குவோம்.

பெருமைமிகு மழையைப் போற்றுவோம். உயிர்களை காக்கக்கூடிய மழை நீரைப் போற்றுவோம். கடல் சூழ்ந்த இவ்வுலகம் சோழமன்னன் கருணை மழையால் காத்து வளர்க்கப்படுதல் போல் மாமழையும் வானின்று பொழிந்த வையத்து உயிர்களைக் காத்து வளர்க்கின்றது பெருமையுடையது. ஆதலின் வான்மழையை வாழ்த்தி வணங்குவோம்.

பூம்புகார் நகரைப் போற்றுவோம். பூம்புகார் நகரைப் போற்றுவோம். விரிந்த கடலே வேலியாக அமைந்த உலகுக்குப் பெருமை சேர்த்த சோழப் பேரரசுகள் போல இக்காவிரிப் பூம்படடினமும் புகழ் ஈட்டித் தருகின்ற சிறப்புடையது. எனவே இப்பூம்புகார் நகரைப் போற்றுவோம் என வாழ்த்திப் பாடியிருக்கிறார் ஆசிரியர். பொதுவாக மக்கள் ஒருவரை வாழ்த்தும்போது, அடுக்குத் தொடரில் வாழ்த்துவது தமிழர் மரபு. எடுத்துக்காட்டாக, வாழ்க! வாழ்க! போற்றிப்! போற்றி! பொலிக பொலிக பொலி, பொலி அவற்றைப் பின்பற்றியே இளங்கோவும் திங்களைப் போற்றுவோம் போற்றுவோம்

**சூரியனைப் போற்றுவோம் போற்றுவோம்**
**மழையைப் போற்றுவோம் போற்றுவோம்**
**பூம்புகார் போற்றுவோம் போற்றுவோம்**

என மரபு மாராமல் வாழ்த்தியிருக்கிறார். விருந்தினர்களை வரவேற்கும் போது கூட வாருங்கள். வாருங்கள் என்று இருமுறை அழைப்பது மரபு, வருவோரை மகிழ்விக்கும் சொல். மங்கல வாழ்த்துப் பாடல் நிறைமொழியில் மங்கலமாய் அமைந்து இவ்வுலகம் உள்ளவரை இக்காப்பியமும் இருக்கும் என்பதற்குச் சான்றாக அமைந்துள்ளது மங்கல வாழ்த்துப் பாடல்.

## மறைமொழி

சங்க காலத்தில் மன்னர்களுக்கு (குடைமங்கலம்) முடிசூட்டும் விழா நடக்கும் காலத்தில் மக்கள் சான்றோர்கள் (புலவர்கள்) மன்னனை வாழ்த்துவர். நாள்மங்கலம் எனப்படும் மன்னனின் பிறந்தநாள் விழாவை வெகுசிறப்பாகக் கொண்டாடி புலவர்கள் போற்றிப் பாடி வாழ்த்தினர் அப்போது மன்னன் புலவர்களுக்கு பொன்னு பொருள்களை வாரி வழங்குவான். அரசன் வீட்டுத் திருமணம் போன்று கண்ணகிக்கும் கோவலனுக்கும் திருமணம் நடைபெற்றது. மக்கள் மணமக்களை வாழ்த்தினர்.

**விரையினர் மலரினர் விளங்கு மேனியர்**
**உரையினர் பாட்டினர் ஓசிந்த நோக்கினர்**
**சாந்தினர் புகையினர் தயங்கு கோதையர்**
**ஏந்து இன முலையினர் இடித்த சுண்ணத்தர்**
**விளங்கினர் கலத்தினர் விரிந்த பாலிகை**
**முளைக்குட திரையினர் முகிழ்ந்த மூரலர்**
**போதொடு விரிகூந்தல் பொலன் நறுங்கொடி அன்னார்**
**காதலற் பிரியாமல் கவவுக்கை ஞெகிழாமல்**
**தீது அறுக என ஏத்திச் சின்மலர் கொடு தூவி**
**அங்கண் உலகின் அருந்ததி அன்னாளை**
**மங்கல்நல் அமளி ஏற்றினார். தங்கிய,**
**இப்பால் இமயத்து இருந்திய வாள்வேட்கை.**
**உப்பாவைப் பொன்கோட்டு உழையாத எப்பாலும்**
**செருமிகு சினவேல் செம்பியன்**
**ஒருதனி ஆழி உருட்டுவோன் எனவே"**
**சிலம்பு (புகார் - மங்கல வாழ்த்து 51-65)**

தற்காலத்தில் பரிசுப் பொருட்களைக் கொண்டு வருவது போல ஒவ்வொருவரும் வணண்ச் சாந்து, அகில்புகை, அழகிய மாலை, சுண்ணப்பொடி. பலர் விளக்கெடுத்து வந்தனர். சிலர் பொற்கலகம் ஏந்தி வந்தனர். சிலர் முளைத்த பாலிகைக் குடம் ஏந்தி வரிசையில் வந்தனர். பூத்தமுல்லைப் பூப்போலச் சிரிக்கும் வெண்முத்து பல்வரிசையுடைய பெண்கள். கோவலனையும் கண்ணகியையும் வாழ்த்தினர்.

**அவர்கள் வாழ்த்தும்போது நாம் கவனிக்க வேண்டிய வரிகள். இவை**
**ஷஷபோதொடு விரிகூந்தல் பொலன நறுங் கொடி அன்னார்",**
**ஷஷகாதலற் பிரியாமல் கவவுக்கை ஞெகிழாமல்**
**தீது அறுக என ஏத்திச் சின்மலர் கொடு தூவி,"**

பெண்கள் விரிகாந்தலில் சிலமலர்களைச் சூடியிருந்தனர். கண்ணகியைப் பார்த்து, கட்டிய கணவனைப் பிரியாமல், ஓட்டிய கைகளை ஒதுக்காமல் ஒரு குறையுமின்றி நலமாக வாழ்கவென வாழ்த்தினர். அருந்ததி போன்றபெண்பாவை கண்ணகியை திருமணப் பள்ளியில் அமர்த்தினர் மங்கலப் பெணணை வாழ்த்திய மங்கையர்.

ஆசிரியர் இளங்கோவடிகள். அதாவது கண்ணகியை விட்டு கோவலன் பிரிவான். கண்ணகி குறையோடு தான் வாழ்வாள் என்பதை மறைமொழியில் கூறுகிறார். பொதுவாக பெண்கள் கூந்தலை விரித்துப் போடுதல் கூடாது. ஒருவருக்கு ஊரு நேரும்போது கூந்தலை விரித்திருப்பர். கண்ணகிக்கு வாழ்த்துக் கூறுவந்த பெண்களில் சிலர் விரிகூந்தலுடன் சிலமலர் சூடி வந்தனர் என்கிறார். இதே கண்ணகி மதுரைக் காண்டத்தில் வழக்குரைக்கும் போது விரிகூந்தலுடன் தான் கொற்றவை போல் நிற்கிறார். பின்னால் நடக்கப் போகும் நிகழ்வுகளை அடிகளார் முன்னே முன்னுரை போன்று மறைமொழியில் எடுத்துக் காட்டியிருக்கிறார். சிலப்பதிகாரத்திற்கு முன்னே தோன்றிய

கூத்தராற்றுப் படையில் நன்னன்சேய் நன்னனின் நாட்டை வர்ணித்த பெருங்கௌசிகனார் விரலி அருவிநீரில் நீராடிவிட்டு விரிகூந்தலுடன் கூந்தலை உளரவைத்த செய்தியைக் கூறுகின்றார். கூத்தராற்றுப்படை குற்றம் விழுந்த பாடல் என (சான்றொர்கள்) உரையாசிரியர்கள் கூறுகின்றனர். நன்னனக்கு ஊரு நேர்ந்தது. அடிகளார் கூரும் விரிகூந்தல் ஆற்றாப்படையுடன் ஒப்புநோக்கத்தக்கது. மேலும் இராமாயணத்தில் சீதைக்கு துன்பம் வந்தபோது கூந்தலை விரித்துப் போட்டு இருப்பாள். பாரதத்தில் திரௌபதி கூந்தலை விரித்திருப்பாள். சொல்ல முடியாத துன்பத்தின்போது, பெண்கள் கூந்தலை விரித்திருப்பார்கள்.

கண்ணகியையும் கோவலனையும் வாழ்த்திய மங்கலப் பெண்கள் நாடாளும் மன்னனையும் வாழ்த்தினர். சோழன் வாளால் போர் செய்து புகழ் ஈட்டி இமயத்தின் பக்கம் வரை புலிக்கொடி பறக்கச் செய்த வீரன் செம்பியன். இமயத்திற்கு அப்பாலும் புலிச்சின்னத்தின் கொடி பரக்கிறது. ஒரு குடைக்கீழ் உலகாளும் அவன் புகழும் உயருக என்றும் வாழ்த்திப் பாடியுள்ளார் அடிகளார்.

## தொகுப்புரை

சிலப்பதிகாரத்தில் இளங்கோவடிகள் சிறைமொழி, மறைமொழி, இரண்டையும் மங்கல வாழ்த்து பாடலிலேயே எடுத்துக் காட்டியிருக்கிறார். கோலவனுக்கும் கண்ணகிக்கும் திருமணம் நடைபெறும்போது மங்கலப் பெண்டிர் வாழ்த்துகின்றனர். பொதுவாக வாழ்த்தும்போது, எதிர்வினைச் சொற்களைப் பயன்படுத்த மாட்டார்கள் புலவரகள். இளங்கோவடிகள் என்றும் காதலுடன் வாழ்க. இருவரின் கைகளும் சேர்ந்தே இருக்கட்டும் என்று கூறியிருக்கலாம். ஆனால் ஷஷகாதலர் பிரியாமல், கவவுக்கை நெகிழாமல்" என்று பிற்காலத்தில் பிரியப் போகிறார்கள் என்பதை எடுத்துக் காட்டியிருக்கிறார். மற்றவர்களை வாழ்த்துப் போது இருபொருள் தரக்கூடிய சொற்களையும் எதிர்மறைபொருள்தரக்கூடிய சொற்களை வாழ்த்துகளில் பயன்படுத்தக் கூடாது என்பதை ஆசிரியர் நமக்கு எடுத்துக் காட்டியிருக்கிறார்.

## பார்வை நூல்கள்

தொல்காப்பியம், பொருளதிகாரம், இளம்பூரணர் உரை, கழக வெளியீடு

தொல்காப்பியம், பொருளதிகாரம், நச்சினார்க்கினியர் உரை, கழக வெளியீடு

கலைக்களஞ்சியம் - தஞ்சாவூர் தமிழ்ப் பல்கலைக்கழகம்

சிலப்பதிகாரம் - கழக வெளியீடு

## Author Details

**சி. விமலா,** பகுதிநேர முனைவர்பட்ட ஆய்வாளர், மா.மன்னர் கல்லூரி, (த), புதுக்கோட்டை, பாரதிதாசன் பல்கலைக்கழகம், திருச்சிராப்பள்ளி, தமிழ்நாடு, இந்தியா

**முனைவர் சி. அமுதா,** தமிழ்த்துறை, இணைப்பேராசிரியர், மா.மன்னர் கல்லூரி, (த), புதுக்கோட்டை, பாரதிதாசன் பல்கலைக்கழகம், திருச்சிராப்பள்ளி, தமிழ்நாடு, இந்தியா